இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 16 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 08 – வெள்ளிக்கிழமை 25 ஆகஸ்ட் 2023 – கோவை ★ ★ 12+12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 16: Thiruvalluvar Year - 2054 - Aavani 08 - Friday 25 August 2023 - Kovai ★★ 12+12 Pages ₹ 5.00


## வரலாற்றில் தடம் பதித்த சந்திரயான் – 3 விண்கலம்!

# வெற்றிகரமாக நிலவில் தரை இறங்கியது!

## தமிழ்நாட்டைச் சேர்ந்த திட்ட இயக்குநரின் உலகம் போற்றும் சாதனைக்கு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு - பெருமிதம்!

பெங்களூரு, ஆக.25–


**இந்திய விண்வெளி ஆய்வின் வரலாற்று நிகழ்வாக சந்திரயான் 3 விண்கலம் நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியது. அமெரிக்கா, ரஷியா, சீனா உள்ளிட்ட நாடுகள் நிலவுக்கு விண்கலன் அனுப்பிய நிலையில், இந்தியாவின் சந்திரயான் 3 விண்கலம் நிலவில் தரையிறங்கி சாதனை படைத்துள்ளது. சந்திரயான் 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் திட்டமிட்டபடி மாலை 6.04 மணிக்கு நிலவின் தென்துருவப் பகுதியில் இறங்கி முதன் முதலாக வரலாற்றுத் தடம் பதித்தது. இந்தச் சாதனையில் தொடர்புடைய தமிழ்நாட்டு திட்ட இயக்குனருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார்.**

சந்திரயான் 3 வெற்றிக்கு மிக முக்கிய பங்காற்றியவர் அதன் திட்ட இயக்குநர் விஞ்ஞானி வீரமுத்துவேல் ஆவார். அவர் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். பல ஆண்டுகளாக பல்வேறு பொறுப்புகளில் இஸ்ரோவில் பணியாற்றி வருகிறார். கடந்த 2016ஆம் ஆண்டு விண்கலத்தின் மின்னணுப் பொதியில் அதிர்வுகளைக் கட்டுப்படுத்தும் பயனுள்ள முறை குறித்த அவரது ஆய்வுக்கட்டுரை பெங்களூரில் உள்ள யு.ஆர்.ராவ் செயற்கைகோள் மையத்தில் சோதனை நடத்தப்பட்டது. அதன் பின்னர் வீரமுத்துவேல் 2019ஆம் ஆண்டு சந்திரயான்3 திட்ட இயக்குநரானார். அவரது மேற்பார்வையில் உருவாக்கப்பட்டுள்ள சந்திரயான் 3 வெற்றிகரமாக நிலவில் கால் பதித்துள்ளது.

பல்வேறு மாற்றங்களுடன் சந்திரயான் 3 விண்கலத்தை வடிவமைத்து, எல்விஎம் 3 ராக்கெட் மூலம் கடந்த ஜூலை 14ஆம் தேதி இஸ்ரோ விண்ணில் செலுத்தியது. பல்வேறு கட்ட பயணங்களுக்கு பின்னர் நிலவின் சுற்றுப் பாதையில் விண்கலம் பயணித்தது. சந்திரயான் 3இல் உள்ள உந்து கலனில் இருந்து லேண்டர் கலன் கடந்த 17ஆம் தேதி விடுவிக்கப்பட்டது.

நிலவுக்கும் லேண்டர் கலனுக்கும் இடையேயான தூரத்தை பல்வேறு கட்டங்களாக படிப்படியாக இஸ்ரோ குறைத்தது. இறுதியில், குறைந்தபட்சம் 25 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 134 கி.மீ தொலைவும் கொண்ட சுற்றுப் பாதையில் லேண்டர் கொண்டுவரப்பட்டது.

பின்னர் நிலவின் தரையிலிருந்து 150 மீட்டர் உயரத்துக்கு லேண்டர் கொண்டுவரப்பட்டது. சில விநாடிகள் அந்த நிலையிலேயே நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர், அதிலுள்ள சென்சார்கள் மூலம் தரையிறங்க சரியான சமதள பரப்பு கொண்ட இடம் தேர்வு செய்யப்பட்டது. லேண்டரின் வேகம் பூஜ்ஜிய நிலையை எட்டியதும், மெதுவாக நிலவில் தரையிறக்கும் முயற்சியை இஸ்ரோ விஞ்ஞானிகள் மேற்கொண்டனர். அதனையடுத்து படிப்படியாக சந்திரயான்3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியது.



அதனைத்தொடர்ந்து சந்திரயான்3 திட்டம் வெற்றி பெற்றதாக இஸ்ரோ தலைவர் சோம்நாத் அறிவித்தார். இதனைத் தொடர்ந்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கோஷமிட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

**பிரிட்டனின் முதல் விண்வெளி வீராங்கனை ஆச்சரியம்!**

பிரிட்டனின் முதல் விண்வெளி வீராங்கனையான ஹெலன் ஷர்மன் இந்தியாவின் சந்திரயான் திட்டம் குறித்து அங்குள்ள செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டி வருமாறு:–



சந்திரயான் –3 திட்ட இயக்குனர் வீரமுத்துவேல்

“இது புதிய அத்தியாயத்தின் ஆரம்பம். நீங்கள் நிலவுக்கு மனிதர்களை அனுப்புகிறீர்கள் என்றால், நிச்சயமாக அங்குள்ள பனி மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தண்ணீரை ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜனாகப் பிரித்து ஆக்ஸிஜனை சுவாசிப்பார்கள். அதிலிருந்து ராக்கெட்டுக்குத் தேவையான எரிபொருளையும் தயாரிக்கலாம். அதனால், பனி மிகவும் அவசியம். ஆனால், நிலவின் தென் துருவத்தில் பல பள்ளங்கள் அமைந்துள்ளன. மேலும், அவற்றின் விளிம்பின் சில பகுதிகளில் நிலையான சூரிய ஒளி இருக்கும். ஒரு சில பகுதிகளில் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சூரிய ஒளி இருக்கும். எனவே, நீங்கள் சோலார் மின்சாரத்தை உருவாக்கும் இயந்திரத்தை அங்கு வைத்தால், தொடர்ந்து மின்சாரத்தை உருவாக்கிக் கொண்டே இருக்க முடியும்.

மனிதர்கள் இல்லாமல் நிலவில் தரையிறங்குவது, மனிதர்களுடன் தரையிறங்குவதை விட கடினமானது. குழுவினர் இல்லாமல் செல்வதால், உங்கள் கருவிகள் சரியான முறையில் வேலை செய்ய வேண்டும். இரண்டாவது முயற்சியில் ஈடுபடுவதற்கு உங்களுக்கு மிகக் குறைந்த எரிபொருளே இருக்கும். தென் துருவத்தில் மலைகளும் பள்ளங்களும் அதிகமாக இருக்கும். எனவே, நிச்சயமாக அது சவாலானது. தூசிகளும் பிரச்சினையாக விளங்கலாம். இதற்கு முன்பு சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள்தான் இதனை சமாளித்துள்ளன. ஒரு வேளை இந்தியா இதனை சமாளித்தது பெரிய விஷயம். விண்வெளி ஆய்வில் இந்தியாவின் இந்த சாதனை புதிய அத்தியாயத்தின் ஆரம்பம்..”

இவ்வாறு முதலாவது ஹெலன் ஷர்மன் தெரிவித்துள்ளார்.

**சந்திரயான் 3 கடந்து வந்த பாதை**

**ஜூலை 14:** சந்திரயான் 3 விண்கலத்தை சுமந்துகொண்டு எல்.வி.எம்.3 எம்.4 ராக்கெட் மதியம் 2:35 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது.

**ஜூலை 17:** 2வது முறையாக விண்கலத்தின் பாதை உயரம் உயர்த்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 41603 கி.மீ x 226 கி.மீ தொலைவுள்ள நீள்வட்டப் பாதையில் செலுத்தப்பட்டது.


விண்கலத்தின் பாதை உயரம் படிப்படியாக உயர்த்தப்பட்டது.

**ஆகஸ்ட் 1:** புவியின் சுற்றுவட்டப் பாதையில் சுற்றிவந்த சந்திரயான் 3 விண்கலம்


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


### சந்திரயான்-3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேலுக்கு

## முதல்வர் மு.க. ஸ்டாலின் தொலைபேசியில் வாழ்த்து!



சென்னை, ஆக.25-

சந்திரயான் 3 விண்கலம் நிலவின் தென் துருவத்தில் தரையிறக்கப்பட்ட சாதனையையடுத்து, அதன் திட்ட இயக்குநர் விழுப்புரத்தைச் சேர்ந்த வீரமுத்துவேல் அவர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த முதல்வர் அவர்களின் உரையாடல் வருமாறு:-

**முதல்வர் மு.க. ஸ்டாலின்** : வாழ்த்துகள்.. வாழ்த்துகள்.. சந்திரயான் விண்கலம் வெற்றி பெற்றது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே உலக அளவில் பெருமை தேடிக்கொடுத்திருக்கிறீர்கள்.

**திட்ட இயக்குநர் வீரமுத்துவேல்** : ரொம்ப சந்தோஷம் சார்.. ரொம்ப சந்தோஷம்...

**முதல்வர்** : அப்புறம் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள உங்கள் அப்பாவின் பேட்டியை பார்த்தேன். அவர் ரொம்பவும் பெருமைப்பட்டுள்ளார். நீங்கள் தமிழ்நாட்டுக்கு வரும் போது எனக்கு தகவல் மட்டும் சொல்லுங்கள். நான் உங்களைச் சந்திக்கிறேன்.

**வீரமுத்துவேல்** : எஸ் சார். ரொம்ப சந்தோஷம் சார்...

**முதல்வர்** : கட்டாயம் சந்திக்கிறேன். வாழ்த்துகள். எல்லோருக்கும் வாழ்த்துக்களை சொல்லுங்க..

**வீரமுத்துவேல்** : ரொம்ப சந்தோஷம் சார். வாழ்த்துகளை எல்லோருக்கும் சொல்கிறேன் சார். நீங்க கால் பண்ணினதுக்கு ரொம்ப சந்தோஷம் சார். உங்களோட சர்வீஸ் எல்லாம் எங்களுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு சார். ரொம்ப சந்தோஷம் சார்.

**முதல்வர்** : ரைட்...ரைட்...

**வீரமுத்துவேல்** : ரொம்ப சந்தோஷம் சார். நீங்கள் எனக்கு போன் பண்ணினதே ரொம்ப சந்தோஷம் சார்.

**முதல்வர்** : பெரிய சாதனை... பெரிய சாதனை...

**வீரமுத்துவேல்** : சார் இப்ப ரோவர் வந்து வெளியில இருக்கு. சந்திரயானோட ரோவர். அதனால நான் எதுவும் பேச முடியவில்லை. ஏன்னா லாஸ்ட் பியூ மினிட்ஸா நான் ஆபரேஷன்ஸ்ல இருந்ததால எனக்கு முக்கியமான வேலை இருந்துச்சு. எனக்கு ரொம்ப சந்தோஷம் சார், உங்கள் கிட்டே பேசினதுக்கு.

**முதல்வர்** : நல்லது.. நல்லது..

**வீரமுத்துவேல்** : தேங்க் யூ சோ மச் சார். தேங்க் யூ சோ மச்..

**முதல்வர்** : தமிழ்நாட்டுக்கு வரும்போது சொல்லுங்க.. உங்கள நான் மீட் பண்ணுகிறேன்.

**வீரமுத்துவேல்** : ரொம்ப சந்தோஷம் சார்...

**முதல்வர்** : வணக்கம்.

## தமிழ்நாட்டுக்கு என்று தனி குணம் உண்டு! அழுக்காக்கும் கருத்தியல்களைப் புறந்தள்ளி;

# மாணவர்களே, நல்லிணக்கத்தின் பண்பை எடுத்துச் செல்க!

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா - மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டுரை!

சென்னை, ஆக. 25 -

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியருக்கான பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கி உரையாற்றுகையில், “தமிழ்நாட்டுக்கு என்று தனி குணம் உண்டு! அழுக்காக்கும் கருத்தியல்களைப் புறந்தள்ளி நல்லிணக்கத்தின் பண்பை எடுத்துச் செல்லுங்கள்” என்று குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.08.2023) சென்னை, கோயம்பேடு, தூய தாமஸ் கல்லூரிஅரங்கத்தில்மாநிலசிறுபான்மையினர் ஆணையம் சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியருக்கான பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

நேரத்தின் அருமையை கருதி இங்கே குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம்தான் நினைவுப் பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள இருக்கக்கூடிய போட்டியில் வெற்றி பெற்றிருக்கக்கூடிய சகோதர, சகோதரிகளுக்கு பின்னால் நம்முடைய அமைச்சர் அவர்களும் மற்றும் நிர்வாகிகளும் இங்கே வழங்கவிருக்கிறார்கள். ஆகவே, தயவுகூர்ந்து எல்லாம் பொறுத்தருளுமாறு உங்களை நான் அன்போடு கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**என்னை சுறுசுறுப்பாக இயக்குபவர்கள் மாணவர்களும், இளைஞர்களும்தான்!**

எப்போதும் என்னை சுறுசுறுப்பாக வைத்திருக்கக்கூடிய, ஊக்கம் தரக்கூடிய வகையில் என்னை இயக்கிக் கொண்டிருக்கக் கூடியவர்கள் யார் என்று கேட்டால், மாணவர்களும், இளைஞர்களும்தான்.

எனவே, அப்படிப்பட்ட மாணவ – மாணவியர்கள் நிரம்பியிருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சியில், உங்களிடையே இருப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

“தலை நிமிரும் தமிழகம்” என்ற என்னுடைய தமிழ்நாட்டின் விடியலுக்கான முழக்கத்தை, கல்லூரி மாணவர்களிடம் கொண்டு போய் சேர்க்கவேண்டும். அந்த அடிப்படையில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தைச் சார்ந்த சகோதரர்கள், நிர்வாகிகள் இந்தப் பேச்சுப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி, அதில் மாநில அளவில் வெற்றி பெற்றிருக்கக்கூடிய மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கியிருக்கிறோம்.

ஆனால், என்னைக் கேட்டால், இந்த பேச்சுப் போட்டிகளின் மூலமாக அடையாளம் காணப்பட்டுள்ள இளம் பேச்சாளர் களைத்தான், தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் கிடைத்த பெரும் பரிசு என்றுதான் நான் சொல்லுவேன்!

ஏனென்றால், பேச்சுக்கலை என்பது எல்லோருக்கும் எளிய வகையில் வந்துவிட முடியாது. மேடைகளில் பேசுபவர்கள்


தொடர்ச்சி 4ஆம் பக்கம்